முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு எடுத்த சீரிய முயற்சிகளால்

# தமிழ்நாடு சிறைத்துறை அகில இந்திய அளவிலே முதலிடம்!

## சட்டத்துறை மற்றும் நீதி நிருவாகத்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலுரை!

சென்னை, ஜூன் 26 -

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசு எடுத்த சீரிய முயற்சிகளால் தமிழ்நாடு சிறைத்துறை அகில இந்திய அளவிலே முதலிடம் பெற்றுள்ளது என சட்டத்துறை மற்றும் நீதி நிருவாகத் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலுரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

அமைச்சர் எஸ்.ரகுபதியின் பதிலுரை வருமாறு:

எங்கள் வாழ்வும், எங்கள் வளமும், மங்காத தலைவர் கலைஞர் புகழ் என்று சங்கே முழங்கு என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) ஓய்வின்றி உழைத்த, தலைவர் கலைஞர் ஓய்வுக் கொண்டிருக்கின்ற திசைநோக்கி வணங்குகின்றேன். பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், திராவிட இயக்கம் தமிழ் மண்ணிலே வேர் ஊன்ற காரணமாக இருந்த, வித்தகர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களை இந்த நேரத்திலே நினைவு கூறுகிறேன்.

அஞ்சாமை என்பது உடன் பிறப்பு, பணிவுடமை என்பது இணைபிறப்பு, அன்புடமை என்பது தனிச்சிறப்பு, துணிவுடமை என்பது காலச்சிறப்பு இவையே எங்கள் தளபதியின் முழு சிறப்பு என அனைத்து சிறப்பிற்கும் தகுதி உடைய உங்கள் தளபதியே! நீங்கள் இந்தியா கூட்டணியின் அஸ்திவாரம்! ஒன்றிய அரசை கண்டு, அஞ்சாத சிங்கம்! உங்களுக்கு தலை வணங்குகிறேன். 'குலவிச்சை கல்லாமல் பாகம் படும்' என்ற பழமொழி உண்மையாக்கி, இரவு, பகல், மழை, வெயில் என்று பாராமல் என் கடன் பணி செய்து கிடப்பதே! என்று மக்கள் பணியாற்றும் தமிழ் இளைஞர்களின் கேடயமே! நாற்பதுக்கு நாற்பதின் அடையாளமே! மாற்றுக்கொள்கை எனக்கு சிம்ம சொப்பனமே!, கழகத்திற்கு மட்டுமின்றி தமிழகத்துக்கே கிடைத்தது இருக்கின்ற உண்மையான இளைய தளபதியே! (மேசையைத் தட்டும் ஒலி)

நீதி நிர்வாகம். நாட்டின் அரசியல் அமைப்பிற்கு சட்டமும் ஒழுங்கும், மருந்து போன்றவை. அரசியல் நிலைமை நோயுறும்பொழுது மருந்து கண்டிப்பாக தரப்படவேண்டுமென்று சொன்னார் டாக்டர் அண்ணல் அம்பேத்கர். எனவே ஒரு நாட்டின் சட்டம் ஒழுங்கு சீர்குலையாமல் பாதுகாக்கப்பட்டு, அமைதி பூங்காவாக அந்த நாடு திகழவேண்டும் என்று சொன்னால், மக்களாட்சியினுடைய நான்கு தூண்களில் ஒரு தூணாக கருதப்படுகிற நீதித் துறை, நீதி நிர்வாகம் மிகச்சிறப்பாக செயல்பட வேண்டும். அப்போதுதான் சட்டம் ஒழுங்கை நாம் சிறப்பாக பேணி பாதுகாக்கமுடியும். அதை காக்க அரசுக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய ஒரு துறையாக நீதித் துறையும், சட்டத் துறையும் இன்றைக்கு தலைவர் தளபதி அவர்களுக்கு துணையாக விளங்கிக்கொண்டிருக்கிறது.

### குற்றங்களைத் தடுக்க உரிய நடவடிக்கை!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீதித் துறையினுடைய ஒத்துழைப்போடு, சட்டத் துறையின் மூலமாக சமுதாயத்தில் குற்றங்கள் பெருகுவதைத் தடுத்து நிறுத்தியும், பெருகிவரும் குற்றங்களைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டும், தமிழகத்தை இந்தியாவிலேயே அமைதி பூங்காவாக திகழ்கின்ற மாநிலமாக இன்றைக்கு உருவாக்கியுள்ளார். இது அவருடைய ஆட்சிக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய அங்கீகாரமாகும்.

தமிழகத்தில் இன்றைக்கு சிறப்பு நீதிமன்றங்களையும் சேர்த்து 1,357 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டில் 77 நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. POCSO வழக்குகள், பொருளாதார குற்றப்பிரிவு வழக்குகள், போதை மற்றும் மயக்கப் பொருள் தடை வழக்குகள், வணிக குற்றவியல் வழக்குகள், cyber crime வழக்குகள், மகளிருக்கான உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதற்கான வழக்குகள் போன்றவையெல்லாம் இன்றைக்கு மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்கி இருக்கின்ற காரணத்தால் நீதிமன்றங்களை மக்கள் நாடுகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது, ஏற்பட்டிருக்கின்றது. எனவேதான் அதிகமான நீதிமன்றங்கள் தேவைப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட 245ஏற்கெனவே 250 என்று சொன்னேன், 245 காலிப் பணியிடங்களுக்கு நேரடி நியமனம்மூலம் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் 240 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு மாநில நீதித் துறையில் உரிமையியல் நீதிபதிகளாக இளநிலைப் பிரிவு, அவர்கள் நியமிக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, 2023 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட 50 காலிப் பணியிடங்களுக்கு நேரடி நியமனம்மூலம் உயர் நீதிமன்றத்தால் ஆறு நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு மாநில நீதித் துறையில் மாவட்ட நீதிபதியாக நீதிபதி நுழைவு நிலையில் அவர்கள் நியமிக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 2021 மற்றும் 2024க்கு இடைப்பட்ட காலத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் 50 அரசு உதவி வழக்கு நடத்துநர் நிலைII தேர்வு செய்யப்பட்டு, குற்ற வழக்கு தொடர்புத் துறையில் நியமிக்கப்பட்டு, தற்போது தமிழ்நாடு மாநில நீதித் துறை கழகத்திலே அவர்கள் பயிற்சிப் பெற்று வருகின்றனர். கடந்த மூன்று ஆண்டுகளிலே நீதிபதிகள் மற்றும் நீதித் துறை அலுவலர்கள் குடியிருப்புகள் கட்டுவதற்கும், நீதிமன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் ரூ.494.82 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் நீதிமன்றங்களில் மின்னணு உட்கட்டமைப்பு eCourts வசதிகளை மேம்படுத்துவதற்காக தேவையான இணையதள வசதி, கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்கள், மடிகணினிகள் வாங்குவதற்கு ரூ.76.19 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இளம் வழக்கறிஞர்களுக்கு மாத உதவித் தொகையாக நபர் ஒருவருக்கு மூன்றாயிரம் வீதம் டிசம்பர் 2023 முதல் மே 2024 வரையிலான காலகட்டத்திலே ரூ.1.80 கோடியை இந்த அரசு வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதற்கான நிபந்தனைகளுடைய அடிப்படையிலேதான் இது வழங்கப்படுகிறது என்பதை உறுப்பினர் துரை. சந்திரசேகர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாயத்திலே ஒரு மனிதன் மனிதனாக வாழ வேண்டும். எந்த ஒரு மனிதனும் பிறப்பால் எந்தவிதமான தவறு செய்கின்றவனாக, குற்றம் செய்பவனாக பிறப்பால் பிறப்பது கிடையாது. சந்தர்ப்ப சூழ்நிலைகள், அவர்கள் வளரும் சூழ்நிலைகள் அவர்களை தவறு செய்பவர்களாக சில சமயங்களிலே உருவாக்கி விடுகிறது. அப்படி அவர்கள் செய்யும் தவறுகளை தவறு என்று உணர வைத்து, அவர்களை நல் வழிப்படுத்தி, சமுதாயத்தோடு ஒருங்கிணைந்து வாழவைக்கின்ற தலையாயப் பணியைச் செய்கின்ற ஒரு சிறப்பான பணியினைத்தான் இன்றைக்கு தமிழகத்தினுடைய சிறைகள் மற்றும் சீர்த்திருத்தப் பணிகள் துறை மிகச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை சிறைகள் மற்றும் சீர்த்திருத்தப் பணிகள் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 142 சிறைச்சாலைகள் உள்ளன. இந்த 142 சிறைச்சாலைகளிலே இருக்கக்கூடிய இடவசதியானது 24,342 ஆகும். அதில் தற்போது 21,470 சிறைவாசிகள் தண்டனை மற்றும் விசாரணை சிறைவாசியாக சிறைவாசம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

### சிறைச் சாலைகளில் நூலகங்கள்!

1.4.2024ன்படி சிறைத் துறையிலே பணியாற்றுகின்ற பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 5,489. தமிழக சிறைகளிலே உள்ள சிறைவாசிகளை நல்வழிப்படுத்துவதற்காக சிறைகளிலே நூலகங்களை உருவாக்குவது அவசியம் என்பதை உணர்ந்த நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மத்திய சிறைகள் மற்றும் மாவட்ட சிறைகளில் கண்டிப்பாக நூலகங்கள் உருவாக்கப்பட வேண்டும், அதை சிறைவாசிகள் பயன்படுத்த வேண்டும். அதன் மூலமாக அவர்கள் திருந்தி வாழ்வதற்கு நூலகம் அவர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்கின்ற உன்னத நோக்கத்தோடு சிறைகளிலே நூலகங்களை உருவாக்கி, அதற்காக 1,500 புத்தகங்களை வழங்கியிருக்கின்ற முதலமைச்சர்தான் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆவார்கள். இன்றைக்கு சிறைத் துறைக்கு 1 இலட்சம் புத்தகங்களை தமிழக அரசின் மூலமாக, பல்வேறு புத்தக கண்காட்சிகள் மூலமாக பெறப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

சிறைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதில் கல்வி முக்கிய பங்கு அளிக்கிறது. ஏற்கெனவே பெற்றுள்ள கல்வியறிவின் அடிப்படையிலே ஆரம்பக் கல்வி, தொடக்கக் கல்வி, மேல்நிலைக் கல்வி, திறந்தவெளி பல்கலைக்கழகங்கள் மூலமாக இளநிலை, முதுநிலை, பட்டப் படிப்பு மற்றும் வேலை வாய்ப்பு சார்ந்த பயனுள்ள பட்டயம் மற்றும் பட்டப் படிப்பு ஆகியவற்றை படித்து வருகிறார்கள். SSLC மற்றும் +2 தேர்வில் நமது சிறைவாசிகள் தேர்வு எழுதிய மாணவர்களிலே, 10 ஆம் வகுப்பிலே 87.7 சதவிகிதமும், +2வில் 92.8 சதவிகிதமும் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்பதை நாங்கள் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம். சிறைகளிலே அவர்களுக்கு சிறந்த கல்வி கற்பிக்கப்படுகிறது என்பதற்கு இந்த சதவிகிதம் என்பது ஒரு எடுத்துக்காட்டாக அமையும். எனவே, சிறைவாசிகளினுடைய நலன் என்பது அவர்கள் கல்வியறிவு பெறுவதிலேதான் இருக்கிறது என்பதை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு செயலாற்றுகிறது என்பதற்கு இது ஒரு உதாரணம்.

இந்தியாவிலே உள்ள சிறைகளிலே சிறைக்கு வருகின்றவர்களை திருந்தி வாழ செய்து, நல்வழிப்படுத்தி, அவர்களுக்கு பணிகளைத் தந்து, அவர்கள் சிறையிலே வசிக்கின்ற காலத்திலேயே தொழில் செய்து, ஊதியத்தைப் பெற்று, தன்னுடைய குடும்பத்திற்கு தருகிற ஒரு இடமாகவும் தமிழ்நாடு சிறைச்சாலையை நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். குறிப்பாக சென்னை, அம்பத்தூரில் இருக்கக்கூடிய புழல் பெண்கள் சிறையில் இருக்கக்கூடிய பெண் சிறைவாசிகளே நிர்வகிக்கின்ற petrol bunk இன்றைக்கு மிகச் சிறப்பாக மிகுந்த இலாபத்தோடு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அதேபோல, சிறையிலே தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்க Prison Bazaarசிறை சந்தைகள், விற்பனை நிலையங்களை உருவாக்கி, அதிலே கிடைக்கிற இலாபத் தொகைகளை சிறைகளிலே இருக்கின்ற சிறைவாசிகளின் நலனிற்காகவும், அவர்களுடைய நல நிதிக்கும், அவர்களுக்கும் தருகின்ற சிறப்பான பணியினையும் தமிழ்நாடு முதலமைச்சருடைய அரசு செய்து வருகிறது. இந்த Prison Bazaar மூலம் 20232024 ஆம் ஆண்டு 735.57 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு, 1 கோடியே 61 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் நிகர இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. ஒருவர் சிறையில் இருக்கும்பொழுதே வெளியிலே இருந்தால் தன் குடும்பத்தைக் காப்பாற்ற எந்த அளவிற்கு பொருள் ஈட்ட முடியுமோ அந்த அளவிற்கு சிறையில் இருந்தபடியே தன் குடும்பத்தைக் காப்பாற்ற பொருள் ஈட்டக்கூடியவனாக, வருவாய் ஈட்டக்கூடியவனாக ஒருவனை உருவாக்குகின்ற பணியினையும் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை மிகச் சிறப்பாக செய்து வருகிறது.



### சிறை அலுவலர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி!

சிறைவாசிகளுடைய மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதன் அதிமுக்கியத் துவத்தினைக் கருத்தில்கொண்டு சிறை அலுவலர்களுக்கு போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தும்பொருட்டு அவர்களுக்கு அளிக்கப்படும் அடிப்படை பயிற்சி உள்ளிட்ட அனைத்து பயிற்சிகளும் சிறைவாசிகளின் மனித உரிமைகள் தொடர்பான பாட திட்டங்கள் இடம் பெற்றுள்ளன. மேலும், சிறைவாசிகளின் மேம்பட்ட வாழ்க்கைத்தரத்தை உறுதிபடுத்தும்வண்ணம் அனைத்து சிறைகளிலும் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் வகையி லான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் மனித உரிமைகள் ஆணைய அதிகாரிகள் மற்றும் பிற உயர் அதிகாரிகள் மாநிலத்திலுள்ள சிறைகளிலுள்ள சிறைவாசி களுக்கு வழங்கப்படும் அடிப்படை வசதிகள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சிகிச்சைகளை ஆய்வு செய்து தமிழ்நாட்டின் சிறை நிர்வாகத்தை பாராட்டியுள்ளனர். சிறைவாசி களுக்கு நோயினை கண்டறிந்து அதற்குத் தேவையான சிகிச்சையளிக்கும்

## சட்டக் கல்வியில் சிறந்து விளங்குகிற மாநிலம் தமிழ்நாடு!

பொருட்டு சிறை மருத்துவமனைகள் தன்னார்வ தொண்டு நிறுவனங்க ளோடு இணைந்து மருத்துவ முகாம்கள் அங்கே தொடர்ந்து நடத்தப்படுகின்றன. சிறைவாசிகளுக்கு நோய் தாக்காமல் தடுக்கும்பொருட்டு பொது மருத்துவம், கண், பல் போன்ற சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன.

தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தமிழ்நாட்டிலே உள்ள அனைத்து சிறைகளிலும் மொத்தமாக 100 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. சிறை நீதிமன்றங்கள் மூலமாக 20232024 ஆம் ஆண்டில் 1950 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. சிறைவாசிகளுடைய நீதிமன்ற காவலை நீட்டிக்கும்பொருட்டு நீதிமன்றத்தில் நேரடியாக முன்னிலைப் படுத்தாமல் சிறைகளையும், நீதிமன்றங்களையும், நீதிமன்ற வளாகங்களையும் மின்னணு முறையில் இணைக்கும் காணொலிக் கலந்துரையாடல்மூலம் முன்னிலைப்படுத்தும் வசதி மிகச் சிறந்த வாய்ப்பாகும். தற்போது, மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள், மாவட்ட சிறைகள் மற்றும் கிளைச் சிறைகள் உட்பட 117 சிறைகள் 403 நீதிமன்றங்களுடன் காணொலிக் கலந்துரையாடல் கணினிகள் மூலம் இணைக்கப் பட்டுள்ளன. கடந்த 3 ஆண்டுகளிலே நீதிமன்றக் காவல் நீட்டிப்புக்காக 5,04,471 நேர்வுகளில் காணொலிக் கலந்துரையாடல்மூலம் நீதிமன்ற ங்களிலே சிறைவாசிகள் முன்னிலைப்படுத்தப் பட்டுள்ளனர்.

Tata Institute of Social Sciences, Centre for Social Justice, Commonwealth Human Rights Initiative போன்ற நிறுவனங்கள் இணைந்து இந்திய அளவிலே அனைத்து மாநிலங்களிலும் உள்ள சிறைத் துறையினுடைய செயல்பாடுகளை ஆய்வு செய்து இடவசதி, நிதி ஒதுக்கீடு மற்ற பயன்படுத்துதல் சிறைவாசிகளுடைய சீர்திருத்த நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு களப்பணியின் அடிப்படையிலே மாநில சிறைத் துறைகளை தரவரிசைப் படுத்தி India Justice Report (IJR) என்ற ஆய்வறிக்கையை வெளியிட்டு வருகிறது. இந்த ஆய்வறிக்கையின்படி தமிழ்நாடு சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை 2019 ஆம் ஆண்டில் 10வது இடத்திலும், 2020 ஆம் ஆண்டிலே 6வது இடத்திலும், இருந்த நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அரசு எடுத்துக்கொண்ட சீரிய முயற்சிகளின் காரணமாகவும், செயல்பாடுகள் காரணமாகவும், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறைத் துறை அகில இந்திய அளவிலே, முதலிடத்தைப் பெற்றுள்ளது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நீதி நிருவாகத்தை நிலைநாட்டுவதற்கு மிகவும் உதவிகரமாக இருப்பது சட்டத் துறைதான். நீதி மற்றும் உண்மையினை, உரிமையினை நிலைநிறுத்துவதே சட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

### சட்டத் துறையின் பங்களிப்பு!

சட்டமன்றத்திலே சட்டங்களை இயற்றி அதற்கு ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத் தருகிற பணியையும் அதே நேரத்திலே நீதிமன்றங்களிலே தமிழக அரசுக்காக வழக்குகள் தொடுக்கின்ற பணி, எதிர் வழக்காடுகிற பணி, சட்ட ஆலோசனை வழங்குகின்ற பணி இவற்றையெல்லாம் செய்கின்ற தலையாய பணிகளைச் செய்வது தமிழக அரசினுடைய சட்டத் துறையாகும். எனவே, நம்முடைய சட்டத் துறையினுடைய சட்ட வல்லுநர்களால் இங்கே இருக்கும் பல்வேறு துறைகளிலே அரசின் சொத்துகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அரசு கொண்டு வருகிற பல்வேறு அரசாணைகள் நிலைநிறுத்தப்படுகின்றன. அதற்கு சட்டத் துறையினுடைய பங்களிப்பு என்பது மிகுந்த அளவிலே இருக்கிறது என்பதை அனைவரும் பாராட்டக்கூடிய ஒன்றாகும்.

சிறந்த சட்டக் கல்வியை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது என்பதற்கு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தினுடைய சீர்மிகு சட்டப் பள்ளியிலே School of Excellence in Law சேருகிற மாணவர்களினுடைய தரமதிப்பீடு, அதே போல், அரசு சட்டக் கல்லூரிகளிலே சேருகிற மாணவர்களுடைய தர மதிப்பீடு இவற்றை வைத்துப் பார்த்தாலே தெரியும் அங்கே சேருகின்றவர்கள் 80 Markக்கு கீழே அங்கு இடமே கிடைப்பது கிடையாது. அந்தளவிற்கு இருக்கின்றது. முதலிடமாக வருகின்றவர்கள் இப்பொழுது எல்லாம் admission நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றவர்கள் தான் முதலிடத்திலே என எல்லாக் கல்லூரிகளிலும் சேர்க்கப்படுகிற சூழ்நிலையை தமிழ்நாடு அரசு உருவாக்கியிருக்கிறது என்று சொன்னால் சட்டக் கல்வியில் சிறந்து விளங்குகிற மாநிலமாக தமிழ்நாடு அரசினுடைய சட்டக் கல்வித் துறை சிறப்போடு செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு நம்முடைய உறுப்பினர்கள், இங்கே பல்வேறு வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நாங்கள் படித்துப் பார்த்திருக்கின்றோம். போதிய விளக்கங்களைத் தந்திருக்கின்றோம்.

அதோடு இல்லாமல் இன்றைக்கு இங்கே சட்டமன்றப் பேரவையிலே சட்டத் துறையினுடைய, சட்டம் நீதி நிருவாகம் இவற்றிலே பேசிய நம்முடைய உறுப்பினர்கள், வேலு அவர்கள், அப்துல் வஹாப் அவர்கள், துரை. சந்திரசேகர் அவர்கள், சின்னப்பா அவர்கள், வேல்முருகன் அவர்கள் ஆகியோர் தங்கள் பல்வேறு கருத்துகளைச் சொல்லியிருக்கின்றார்கள். அப்துல் வஹாப் இங்கே பேசுகின்றபோது கிருஷ்ணராயபுரம் தொகுதி MLA விற்கும் சேர்த்துப் பேசினார். ஒன்றை மட்டும் நான் இங்கே எல்லோருக்கும் சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம். நீதிமன்றங்களை கொண்டு வர வேண்டுமென்கின்ற ஆசை எங்களுக்கு உண்டு. அதற்காக உயர் நீதிமன்றங்களும் பரிந்துரை செய்கின்றன. ஆனால், நிதியாதாரம் போதுமானதாக இல்லை. ஒரு நீதிமன்றம் துவங்குவது என்று சொன்னால் அங்கு குறைந்தபட்சம் 15 பணியிடங்கள் முதலிலே உருவாக்கப்பட வேண்டும்.

அந்த 15 பணியிடங்களுக்கு தோராயமாக ஓராண்டிற்கு 1 கோடியே 40 இலட்ச ரூபாய் அளவிற்கு இன்றைக்கு தொடர் செலவினமாக வருகிறது. ஒவ்வோராண்டும் அது தொடர்ந்துகொண்டே இருக்கிறது. எனவே, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் எங்கெங்கு நீதிமன்றங்கள் உடனடியாகத் தொடங்க வேண்டுமோ, அங்கெல்லாம் துவக்கப்பட்டும், மற்ற இடங்களுக்கெல்லாம் எப்போது நிதி ஆதாரம் கிடைக்கிறதோ, அப்போது துவக்கப்படுகின்றன.

## தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிய மாவட்ட சிறைச்சாலை!

### நீதிமன்றங்கள் துவங்க முயச்சி மேற்கொள்ளப்படும்!

குளித்தலைக்கும், கிருஷ்ணராயபுரம் தொகுதிக்கும் இடையே இருக்கக்கூடிய கடவுதூர இடைவெளி மிகத் தொலைவுதூரம் என்பது அரசிற்கு தெரியும். அதனை நமது உயர் நீதிமன்றத்தின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, மேலும், இதனை சட்டத் துறை மட்டும் செய்ய இயலாது, உள் துறையும், நிதித் துறையும் மற்றும் அனைவரின் பரிந்துரைகளும் இருந்தால்தான் அதுபோன்ற நீதி மன்றம் துவங்க முடியும். சட்டத் துறையினால் எந்த அளவிற்கு இந்த வருடமே அதனை துவங்க நடவடிக்கை எடுக்க முடியுமோ, அந்த அளவிற்கு முடிந்த அளவில், நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாங்கள் முயற்சிக்கிறோம் என்பதை மட்டும் இங்கே சொல்லிக்கொள்கிறேன், உறுதியாக தரப்படும் என்று சொல்லவில்லை. தருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மட்டும் இங்கு சொல்லிக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களுக்கு புதிதாக ஒரு கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். ஆனால், நாம் கேட்பது, திருநேல்வேலி மாவட்டத்தில் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய வள்ளியூருக்குட்பட்ட வழக்குகளை நீங்கள் வள்ளியூருக்கு மாற்றித் தர வேண்டும். எனவே, எந்தவிதமான புதிய இட வசதியும் தேவையில்லை.

போதிய இட வசதிகளுடன் இருக்கின்றன என்று பேரவைத் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறீர்கள். இதனை துறைமூலம் உயர் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அவர்களின் பரிந்துரையுடன்தான் இதனை செய்ய இயலும். துறைமூலம் மட்டும் இதனை செய்ய முடியாது. எனவே இதனை உயர் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அதன் பிறகு உள் துறையும், நிதித் துறையும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்த வகையில் திசையன்விளை உங்களுக்கு வந்ததோ அதேபோன்று, இதுவும் வருவதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருவதற்கு துறை நிச்சயமாக உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக உறுப்பினர் அப்துல் வஹாப் அவர்கள் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் கூடுதல் நீதிமன்ற வளாகம் கட்டித் தருவது குறித்து கேட்டிருக்கிறார்கள். அவ்விடத்தில் 14 நீதிமன்ற அரங்கங்கள் மற்றும் லோக் அதாலத் உள்ளிட்ட கூடுதல் நீதிமன்ற வளாகம் 67 கோடியே 10 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்காக சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து தற்போது பரிந்துரை பெறப்பட்டுள்ளது. ஆனால், 67 கோடி நிதியை ஒரே இடத்திற்கு ஒதுக்குவதென்பது நிதித் துறை மற்றும் உள் துறையின் பரிந்துரைகளையும் பொறுத்து இருக்கின்றன. எனவே, இந்த ஆண்டு துறைக்கு கிடைக்கின்ற மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டு பங்களிப்பு மற்றும் பிற இனங்களைப் பரிசீலித்து, அதனைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். உறுதியாக அல்ல.

அடுத்தபடியாக, உறுப்பினர் துரை. சந்திரசேகர் அவர்கள் பேசும்போது, கருத்துரு மோதல் என்பது குறித்து இனக் கலவரங்களுக்கு சிறப்பு நீதிமன்றம் வேண்டுமென்று கோரினார்கள். தென்மாவட்டங்களில் நிகழும் இனக் கலவரங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென மாவட்ட நீதிபதி நிலையில் மதுரையில் ஒரு அமர்வு நீதிமன்றம் இருக்கிறது. கருத்துரு மோதல் தொடர்பான வழக்குகளின் எண்ணிக்கை அந்த நீதிமன்றத்தில் மிகக் குறைந்த அளவில்தான் இருக்கின்றன. எனவே, இதற்காக சிறப்பு நீதிமன்றம் புதிதாக அமைப்பதற்கான வாய்ப்பு எழவில்லை. ஒரு நீதிமன்றத்திற்கே போதுமான அளவில் அங்கு வழக்குகள் இல்லை. எனவே, இதற்காக புதிதாக ஒன்று அமைக்க தேவை எழவில்லை என்பதை சொல்லிக்கொள்கிறேன்.

### இளம் வழக்கறிஞர்களுக்கு உதவித் தொகை!

இளம் வழக்கறிஞர்களுக்கு ஏற்கெனவே நான் சொல்லிவிட்டேன், அதற்கு பல தகுதிகள் இருக்கின்றன. அனைத்துத் தகுதிகளையும் பூர்த்தி செய்கின்றவர்களுக்கு நிச்சயமாக அவர்களுக்கான உதவித் தெகையை அரசு வழங்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் நீதிமன்றங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்றன. அங்கெல்லாம் சொந்தக் கட்டடங்கள் வேண்டுமென்ற கோரிக்கை குறித்து பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் இடம் தேர்வு செய்திருக்கிறோம் என்றுகூட தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும், ஒரு வருடத்திற்கு இவ்வளவு கட்டடங்கள்தான் கட்ட முடியும் என்ற வரையறையுடன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதியிலிருந்துதான் அனைத்து செலவுகளையும் மேற்கொள்ள இயலும். எனவே, எந்த அளவிற்கு நீதிமன்றங்களை கொண்டுவர முடியுமோ, அந்த அளவிற்கு நீதித் துறைக்கு முக்கியத்துவம் தருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நீதியை நிலைநாட்ட வேண்டுமென்று எண்ணுகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறை உள்ள முதலமைச்சர் அவர்களுக்கு நல்ல மனம் இருக்கிறது. எனவே, எந்த அளவிற்கு நிதி ஒதுக்க முடியுமோ, அந்த அளவில் தருவார்கள். அந்த நிதியில் துறையும் எந்த அளவிற்கு பணிகளை மேற்கொள்ள முடியுமோ அந்த அளவிற்கு பணிகளை மேற்கொள்ளும் என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எனவே, உறுப்பினர்களனைவரும் தாங்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, கோரிக்கைகளனைத்தையும் நிறைவேற்றித் தர வேண்டுமென உங்களனைவரையும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

### அறிவிப்புகள்
### நீதி நிருவாகம்

1. திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறையில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றம் புதியதாக அமைக்கப்படும்.

திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறையில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித் துறை, நடுவர் நீதிமன்றம் தேவையான பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் புதியதாக அமைக்கப்படும்.

2. கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலத்தில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றம் புதியதாக அமைக்கப்படும்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலத்தில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றம், தேவையான பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் புதியதாக அமைக்கப்படும்.

3. கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூரில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றம் புதியதாக அமைக்கப்படும்.

கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூரில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றம், தேவையான பணியிடங்கள் மற்றும் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் புதியதாக அமைக்கப்படும்.

4. புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில்

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்